ஸ்ரீராமஜயம்.

ஹநுமாநந்தாதி.

இஃது.

ஸ்ரீரங்கம் வேதாந்தி ரங்கநாதராயர்

அன்பில்வேங்கடாசாரியார்

துறையூர் நரசிங்கராவு

விதுஷீ ஸ்ரீரங்கம்மாள்

முதலிய சிலஆப்தர்கள்

வேண்டுகோளின்படி

திரிசிரபுரம் வீரவல்லிகோயில் சேஷையங்கார்

இயற்றி,

புங்கத்தூர்

ம. சபாபதிமுதலியாரது

கல்விவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பித்தனர்.

௧௮௭௪ ௵ - மார்ச்சுமீ.

குளக்கடைரோட்டில்-௩௮-நெ-வீடு.

ஸ்ரீராமஜெயம்.

அனுமானந்தாதி.

அம்மைவழியாயு மாஞ்சநேயக்கடவுள்
செம்மைதிகழ்பாதஞ் சென்னிவைத்தே-இம்மை
உறுதுயரம்போக்கியுயர் போகுபெறவன்னோன்
மறுவில்கதைசொல்லுகவென் வாய். (௧)

வாயுசுதனாய் வராமன்றூதவனாய்
ஆயுமலர்மங்கைக் கடிமையாய்-மாய்முறு
வஞ்சகர்க்குநஞ்சமதாய் வானவர்க்குநற்றுணையாய்
அஞ்சினவர்தஞ்சமவனாம். (௨)

ஆங்கனஞ்சேர்பொற்பி னகன்முகட்டுமீதொளிரும்
தூங்குமலர்ச்சோலையிடைச் சோங்குமயில்-வீங்குகலை
செஞ்செவேயாடுமெழிற்செவ்வியுடன்றோன்றினளே
அஞ்சனைபென்மாதரசியாங்கு. (௩)

ஆங்கடைந்தவாயு வவளுருவிற்றான்மயங்கி
வீங்குகலையொதுக்கி மெல்லமெல்லப்-பூங்கொடிமேல்
வண்டுவிழுந்தென்னவவன்வண்மையெல்லாமுண்டனனே
அண்டமெலாங்கண்டுலவுவான். (௪)

வானோனதுசெய்யமங்கையறிந்துடனே
காணக்கனலென்னக்கண்ணெரிந்து-மேனி
நிலையுணர்ந்துசாபமிடநெஞ்சிலுன்னவாயு
சலமடக்காயெனவிரந்தான்றான். (௫)

தானேயுமல்லவிந்தத்தாரணியைக்காத்தளிக்கும்
பூ[illegible]ரிகேள்வன்புரமெரித்தோன்-ஆனமுதற்
றேவரோயானுந்தனேயுன்காமவுருக்
காவலாய்த்தாம்விருவா ராய். (௬)

ஆயுமகளிதருருவங்கெடுத்துப்பார்ப்பவருன்
மாயவலைப்படுத்தி மற்றவனைத்-தீய
வெகுளியாற்சுட்டெரிக்கவேண்டுதியோதாண்டு
மிகுளியெனவேஞ்சுமனத்தாய். (எ)

தாயாய்த்தயாபரனுய்த்தற்பரனுய்நின்றபொருள்
வாயானுமானிலத்தில்வந்திழிவோம்-போயே
உருவெடுப்பீர்தேவரொனவோதிமறைந்தான்
கருவறுக்கராவணன்றன்கட்டு. (அ)

கட்டுண்டவானையினுற்காமித்துனையடைந்தேன்
தொட்டுண்டதேனென்னுஞ் சொல்லாளே-அட்டுண்ட
பாலமுதைக்கக்குவரோபாரேநீயுன்மகன்றன்
ஞாலமதின்மேலவனு நீடு. (கூ)

நாட்டிலுயிர்க்கிரங்கிநல்லவர்க்குத்தொண்டுசெய்து
காட்டிற்குரங்கினுருக்காட்டியே-கூட்டத்தார்
உன்னைநகையாம லுன்கொழுநன்றன்மகிழ
மின்னனையாயுன்மகனுமேல். (க0)

மேலானகேசரிக்குவெற்றிதருசுதனுய்
மாலாகுமாரினையுமாற்றியே-காலாலே
எழுமலையேழுகடலேழுலகுநீள்கடிகை
எழதனிற்றுண்டுமவனே. (கக)

அவனேயொருபெரியவாதிப்பரனருளில்
புவனமதிற்பொன்றுவாத்தால்-சிவனே
பயனேபுரந்தரனேயாறுமுகத்தானே
யெவனேயிவனுக்கெதிர். (கஉ)

எதிரிலாநற்புதல்வனென்னக்குளிர்ந்தே
கதிர்கொள்விழிமலரக்கண்டே-அதிரும்
இடக்கரத்தாற்கட்டியிறுக்கிமகிழ்ந்தாளே
மடக்கொடியும்வாதவர சை. (கங)

லைசயோகத்திலமைந்தசந்தியும்பிந்தவொரு
மெய்யாங்கடிகையுள்ளேமேதினியில்-பெய்யும்
மழைபோற்பிறந்தழுதான்வானவர்தநெஞ்சில்
விழைபோல்வளர்ந்தவன்வீறு. (௧௪)

வீறுகொண்டபாலன்விரிகீழ்த்திசைமருங்கில்
ஆறுகொண்டசூரியனையண்மியே-ஊறுசுவைச்
செங்கனியென்றெட்டிநனித்தின்னத்தொடர்கையிலே
அங்கதனைக்கேதுவறிந்தான். (௧௫)

தானொருவனன்றித்தழையுங்கதிரவனை
வானமதிற்கவ்வவருமயலான்-தானவனோ
யாவனோவென்றஞ்சியன்றமரர்கோனிடத்தே
பாவினையாச்சொன்னான்பதைத்து. (௧௬)

பதைத்தவுரைகேட்டுப்பட்டக்களிறேறிக்
கதித்தசினத்துவந்துகாண-மதித்த
குரக்குச்சிறுவனந்தக்குஞ்சரத்தைநேர்ந்தான்
மரத்துப்பழமெனவேமண்டி. (௧௭)

மண்டிவருமதலைதன்னைமகேந்திரனும்
கண்டெரியுங்கண்ணான்கரந்தொட்டுத்-தண்டனைக்கே
வச்சிரத்தாற்கன்னத்தடித்தலுமேவாய்வெரீஇ
அச்சிறுவன்வீழ்ந்தானடி. (௧௮)

அடிக்கீழ்விழுந்தானையாயிரங்கட்பேயன்
படிக்கேவிடுத்தவன்றன்பாட்டில்-குடித்த
வெறியன்போற்கோபமிகுதியாற்சென்றான்
அறியான்றானுண்டவனென்றாங்கு. (௧௯)

ஆங்கடைந்தசெல்வியிளவஞ்சனையுந்தன்மதலை
தான்கிடந்தகோலந்தனைநோக்கி-பூங்கொடியும்
ஏங்கினளோய்ந்தாள்துவேர்விதியெனக்கை
வாங்கினள்மார்புபுடைத்தாள். (௨௦)

தாளாத்துயருழலுந்தையறனைக்கையமர்த்தி
மீளாத்துயரமெனக்கடியோ-கேளாய்நீ
என்வலியாலிந்தவிளங்குமரன்றானுயிர்ப்பான்
உன்மெலிவையின்னேயொழி. (உக)

ஒழிந்தேயவளிருப்பவோங்கிப்பெருங்கால்
அழிந்தேயுயிரனைத்துமஞ்சப்-பிழிந்துடனே
போட்டினான்காற்றையெல்லாமோவென்றவர்பதைக்க
வாட்டினான்தம்பனையின்வாகு. (உஉ)

வாகுகெட்டுத்தேவரெல்லாம்வாழ்மலரோன்முன்றணையாச்
சோகமுற்றதேவிடத்துத்தோன்றியே-வேகமுடன்
பிள்ளையுயிரளிக்கப்பின்புசமீரணனும்
கொள்ளவுலகளித்தான்கூறு, (உங)

கூறுகொண்டசீவர்குறைந்தவுயிர்வந்ததுபோல்
வீறுகொண்டுமேலேவிளங்கிநிற்பத்-தேறுதலாய்
ஆதிபிரமன்முதலஞ்சனையின்மைந்தனுக்காய்
ஓதிவரமளித்தாரொத்து. (உச)

ஒத்தவெம்வெம்படையாலூறுபெறானுன்சிறுவன்
மெய்த்தவத்தோர்சாபமதைமேவாது-உத்தமநீ
ஆறவாயென்றுரைத்தேயாங்கவர்கள்போயினபின்
கூறுவான்தேவர்கடங்கோ. (உரு)

கோவென்றலறிக்குலையச்சுதனாவில்
பாவிவயிரப்படைகொண்டு-கோவவச
னாகியேமோதவநுநீண்டுகண்டதனால்
ஆகவேபேருமனுமான். (உசா)

மானார்மயலொழிந்துமண்டுதழல்பொழியும்
வானோன்வழிகலைகள்மாற்றியிவன்-தானேயவ்
வீசனடிமைபுரிந்தேலார்தமையொறுத்தே
பாசையெட்டும்பேசுபவனாம். (உஎ)

புவனனதுகேட்டுப்பகையைமறந்து
புவனநடுவாளியையின்போர்கிக்-கவனமது
அஞ்சனைபால்வைத்தங்கவள்மகிழத்தானணுகி
மஞ்சனையும்விட்டகன்றான்வாயு. (௨௮)

வாயுவருள்புதல்வன்வண்மையுள்ளகேசரியின்
சேயெனவேவளர்ந்துதிண்மையுடன்-ஒய்வினெறிச்
சூரியனைத்தானடைந்துசொல்லீர்கலையெனவே
வீரியமாக்கேட்டான்விரைந்து. (௨௯)

துன்னியவச்சேயின்றுணிவோர்ந்துசூரியனும்
புன்னகையோடாங்குரைப்பான்பூங்குழந்தாய்-என்னுடனே
நீதொடர்ந்துகல்விநெறியறிந்தானீண்மலடி
பேறதுவந்துபிள்ளைபெறுவாள். (௩௦)

வாளெயிறுதோன்றவருவானரச்சேயானுமென்றன்
தாளுறுதிதானறியவேண்டிடுவேன்-தோளுறுதி
கொண்டுமதுபொற்றேனாக்கூடவழியோடவைப்பேன்
தெண்டமினிச்செப்பீர்தெளிந்து. (௩௧)

தெளிந்தவுரைசிறுவன்செப்பச்சிரித்தே
அளித்தேவுளத்தருக்கனப்பா-முளைந்தெயிறு
முற்றவில்லையித்தனைநீமொய்ம்பினுரைத்தைபடா
உற்றறிமேலென்னவுவந்தான். (௩௨)

தான்சொன்னவார்த்தைதரணிதனிற்பொய்க்காமல்
வான்செல்லுதேரின்மறுபுறத்தில்-மீன்செல்லும்
வீதிவதிரவிசையிற்றொடர்ந்தனுமான்
ஓதிவந்தானொன்பதுநாளோர்ந்து. (௩௩)

ஓராழித்தேரையுறுதியுடனெட்டிவிடத்
தேராவருணன்றிகைதப்பி-வாரூரும்
கையயர்ந்துதான்சலிக்கக்கண்சுழன்றுதட்டினிலே
மெய்யயர்ந்துசோர்ந்தான்வியர்த்து. (௩௪)

வியர்ந்துவிழுந்தபச்சைவேகவரியேழும்
அயர்த்ததுகண்டஞ்சனைபின்சிங்கம்-புயத்தினிலே
ஏந்தினான்சென்றானிரவுபகல்குன்றாமல்
மாந்தினான்வான்கலைதன்வாய். (௫௫)

வாயுமனங்களித்தான்மற்றவர்கள்தத்துறல்கொண்
டோயாவிவன்வலியையோர்ந்தக்கால்-சாயும்
கிரகநிலைகண்மாறுங்கீழ்மேற்றிசைகள்
அருகுமெனவயிர்த்தாராங்கு. (௫௬)

ஆங்கவர்கள்வேண்டவருக்கனறிந்தவெலாம்
பாங்குடனேயோதிவந்தபாலகனும்-தாங்கும்
இரதமினிதிறக்கியெந்தாயெதுபுரிவல்
வரதவெனவேண்டிநின்றான்மைந்து. (௫௭)

மைந்தனதுகூறமகிழ்ந்தருக்கன்மாமதலாய்
உன்றனுழைக்கேட்பதொன்றுகண்டாய்-சிந்தனைநீ
மாதர்மேல்வைத்திட்டான்மானிலத்திற்காணிவரும்
ஆதலினாலைந்தையடக்கு. (௫௮)

அடக்கமுடனந்தவரிவசனங்கேட்டரியும்
மடக்கொடியார்பான்மனதைமாற்றித்-திடத்துடனே
ஒன்பானிலக்கணமுமோதுமறைநீதிகளுந்
தன்பாலமர்த்திநின்றான்றான். (௫௯)

தானறிந்தஞானந்தரையிலிடங்கொள்ளாது
பானலங்கொண்மாயன்படுக்கையிலும்-மேனலங்கொண்
டேற்றெடுத்ததென்றாலுமொண்வயிரத்திண்புயத்தான்
ஏற்றசெருக்கடைந்தானீங்கு. (௬௦)

குவ்வுற்றகாட்டிற்குலவுமுனிக்கணங்கள்
செவ்விகெடுத்துமரச்சீராமுதல்-வவ்வி
அடகறைகளெல்லாமலங்கோலமாச்சிதைத்து
விடவவர்கணொந்தார்மெலிந்து. (௬௧)

மெலிந்தமுனிவர்விஷமக்குறும்பன்
நலந்தருவனுளனமக்கு-கலந்தபெரு
ஞானத்தானிங்கிவனை நைதறகாதெனவே
மானித்தார்வன்மதம்போமாறு. (௪௨)

மாறிடுகவின்னேன்மனத் துட்பலச்செருக்கு
மாறிடுகவுள்ளத்தகமைபட்டுத்-தேறிடுக
போதமுறைதன்னிற்பொற்புமிகப்பொலியத்
தீதறவேநீற்க திறன். (௪௩)

திறத்தையபலார்தெரிவிக்கத்தீயோர்
மறத்தையொறுத்துநலம்வாய்ப்ப-அறத்தையே
காப்பானிவனென்றுகண்ணூர்வரமளித்தார்
கோப்பாகவெண்ணங்குளிர்ந்து. (௪௪)

குளிர்ந்தமுகத்தவனாக்கும்பிட்டுடன்குரங்காங்
களிந்தமனத்தவரெம்மய்யீர்-தெளிந்தமுழு
ஞானியரேயுந்தமக்குநானடிமைசெய்வலென்றான்
மோனவருளெல்லாமுதல். (௪௫)

முதலாகும்வாலிமுறைவழுவித்தம்பி
அதமாம்படியலைப்பவண்டிச்-சதமாக
மாமுகபர்வதத்தின்மற்றவனைக்கொண்டிருத்தி
மாமோகங்கொண்டிருந்தான்மன். (௪௬)

மன்னிருந்தகாலத்தயோத்திவளநாட்டின்
மன்னன்றயரதன்றன்மாமகனுய்த்-துன்னி
அருவீரர்கடல்வண்ணனுங்கரக்கர்மாளக்
கருதாப்புறம்வந்தான்காடு. (௪௭)

காடரங்குமொண்கூந்தற்காதலிநேர்தம்பியுடன்
கூடிவனம்புகுந்தான்கோப்புடனே-நாடும்
விநூதன்கரதூடணருர்வெம்பியுயிர்மாளச்
சூராசனங்கொடாசரதிதான் (௪௮)

நானுமனுசனுடன்பிரியத்தானிழைத்து
தேனின்மொழியாளைத்தீண்டாமல்-வானின்
நிலத்தோடுகொண்டுசென்றநீசனிராவணனை
வலத்தாரும்போய்த்தொடர்ந்தார்மன் (௪௯)

மன்னுங்கவந்தனுயிர்மாற்றிப்பருதியின்சேய்
துன்னுமலைபருகிற்றோன்றிநிற்ப-அந்நேரம்
ஆயுமறிவாலவர்பக்கல்போயடைந்தான்
வாயுசுதன்மாணியுருக்கொண்டு (௫௦)

உருக்கொண்டுநின்றானையுய்த்துணர்ந்துநோக்கிக்
கருக்கொண்டகார்மேகவண்ணன்-வரக்கண்டோம்
ஈங்காரிவனையிளவலேகேளென்ன
ஆங்கவனுஞ்சொல்வானடுத்து (௫௧)

அடுத்துநின்றபிள்ளாய்நீயாரென்றறைய
முடித்தலத்திக்கையிரண்டேமூடி-அடித்தலத்துச்
சென்றிறைஞ்சிநாயேனுஞ்சீர்சால்குரக்கரசின்
மன்றமருமாருதியாமற்று (௫௨)

மற்றவன்றன்முன்னோன்மாகோடியோன்வாலியென்பான்
சற்றும்பிறவியெனத்தான்பாரான்-உற்றவன்றன்
பாரியையுங்கொண்டான்பழிகாரனுங்கவனால்
நேருமிடர்தவிர்ப்பீர்நீர். (௫௩)

நீருலகுகாக்குநெடுமாலெனத்தகுவீர்
வீரமறவாலிதனைவெட்டிவிட்டுச்-சாரும்
சரணாகதிதருவீர்தாசவர்க்கமெங்களுக்கும்
அரணாகவேயிருப்பீரால். (௫௪)

ஆல்வளருங்கண்ணனனுஜனெனடுத்துரைத்தான்
கோல்வளையைக்கொண்டரக்கன்சென்றமையை-நூல்வளரு
கல்வியான்கேட்டருக்கன்கான்முளையைக்காப்பதுணையேல்
செல்வியையாந்தேடிடுவோந்தேர்ந்து. (௫௫)

தேர்ந்தவுரைப்கரத்திண்ணமெனத்தாலறிந்தே
ஓர்ந்துசுக்கிரீவனுடனொற்றுமையாச்-சார்ந்துடனே
வாலிதனைவதைத்துமற்றவற்குநாடளித்து
காலின்மைந்தன்மேற்கருணையாய். (௫௬)

கருணையாய்க்கைக்கணையாழிதான்கொடுத்துத்
திருவினைப்போய்த்தேடவெனச்செப்ப-மருவியுடன்
மண்டலங்கள்மாமலைகள்வார்கடல்கடான்றருவிக்
கண்டனனத்தென்கடலின்கா. (௫௭)

காகுறுகிவாடிக்கனக்குழையைக்காணாமல்
மோகமுற்றங்காவிவிடமுள்கையிலே-மாக்ழுகாஞ்
சம்பாதிசொல்லாற்றடங்கிரியைத்தான்மிதித்துப்
பம்மிலங்கைமேற்பெயர்ந்தான் பார்த்து. (௫௮)

பார்த்துமைநாகமதைப்பாணிதொட்டங்காதரித்தே
ஆர்த்துவருஞ்சுரசையாட்சிதப்பி-வேர்த்திழுக்குஞ்
சிம்மிகையின்பொம்முடலைச்சின்னபின்னமாச்சிதைத்துக்
கொம்மைலங்கைசேர்ந்தான்குதித்து. (௫௯)

குதித்துடனேமாவிலங்கைக்கோட்டைமதிலேறி
மதித்துள்ளேபோகுமமையம்-கதித்தெதிர்ந்தே
பாடாவென்னவடியுண்டிலங்கினியும்
பாரிட்ம்போய்வீழ்ந்தாள்பதைத்து. (௬௦)

துப்பார்க்வுள்ளே திருவிமனைகளெல்லாம்
தப்பாதுதேடித்தனிவனத்தே-ஒப்பாது
மாசிறையிலுள்ளவனிதைதனைக்கண்ணுற்றுத்
தேசுகெடநின்றான்றிகைத்து. (௬௧)

திகைத்துநின்றபோதுதசமுகனுந்தேரா
மிகுத்தமதவெறியால்மேவி-மிகப்பணிந்து
வாவுயிரேயென்றுலகனன்றுமினிதிரங்கிப்
போவென்றுருத்துரைத்தாள்பொன்- (௬௨)

பொன்னனங்கைக்கொல்லுமெனப் போரரக்கன்றன்கனன்
தன்னுமரக்கியர்க்குச்சொல்லிவிட்-டந்நேரம் [று
போகவனுமான்புறம்விட்டெதிரடைந்தே
ஓகையுடன்செய்திசொன்னானுற்று. (௬௩)

உற்றகணையாழிவொண்டொடியுந்தன்கொழுநற்
பெற்றகளியளிக்கப்பெட்புடனே-மற்றுமொரு
சூடாமணிகொடுக்கத்தா தவனும்வாளரக்கன்
வாடாதசோலைசெற்றான்வந்து. (௬௪)

வந்தவரக்கர்தமைவாட்டியிராவணனை
நிந்தைசெய்துநீதிசொலிநீணெருப்பைப்-பந்தமுடன்
மூட்டிவிட்டிலங்கையிலேமூண்டேரகுபதிதன்
தாட்டுணைக்குத்தண்டனிட்டான்றான். (௬௫)

தானவிலங்கையிலேசானகியைக்கண்டதுவும்
ஆனவடனேர்மையையுமாங்கறைந்து-மானவன்கை
நீட்டினான்மாமணியைநேரிலங்கைபோம்வழியைக்
காட்டினான்காலின்மகன்கண்டு. (௬௬)

கண்டேகடன்மீதணையைக்கட்டிக்கனாகடந்து
மண்டுசமரதனில்வாளரக்கன்-திண்புயத்தின்
மாவலத்தைமாய்த்து மாவோஷதிகொணர்ந்து
கோவியர்மேற்கொற்றந்து.கொண்டு. (௬௭)

கொண்டல்வண்ணன்முன்பேகுறுகிப்பரதனிடம்
கண்டவன்றனல்வரவுகாட்டியே-அண்டர்பிரான்
மாமகுடஞ்சூட்டும்வளங்கண்டுமாமலராள்
தாமருளுமாரமணிந்தான். (௬௮)

அணிந்தான்பரந்தாமனம்புயத்தாள்சென்னி
பணிந்தாங்குபாரினிலேபண்பாம்-குணந்தாங்கு
தாசாதிமந்திரத்தைச் சங்கரற்குத்தானருளித்
தேசுடையபேருசெய்தான்றேர்ந்து. (௬௯)

தேர்ந்தான்றிருவடியைச்சிந்தையிலேகொள்பவர்க்கு
நேர்ந்தவாழ்விக்குநேயமுள்ளான்-சார்ந்த
ராமனடிதாங்கும்பகுதியான்மாந்தர்
சரமபதந்தருவான்றான். (௭௦)

தானென்செருக்கடக்கித்தற்பரன்றானெஞ்சிருத்தி
மோனகுருபதத்தைமோப்பவர்க்கு-ஞானம்
பெருவெள்ளம்பாயப்பிறவிமலம்போக்கி
ஒருவள்ளமேலேயுறும். (௭௧)

உறும்பிழையைப்போக்கியுற்றநலநல்கி
மறுகும்பிறவிவழியை-இறுகுமா
தாளிட்டடைக்குந்தனியோகிதாமரைத்தாள்
ஆளிட்டவுள்ளத்தவர்க்கு (௭௨)

அவர்க்குமிவர்க்குமடிமையாளாகி
கவற்கொண்டோரின்பங்கருதிச்-சுவர்க்கம்
முதலாம்பதவியிற்போய்மூண்டுபிறவாச்
சதமாம்பதங்கவர்ந்ததாய். (௭௩)

தாயாயகிலந்தனிக்காத்தளிப்பவனென்
தாய்நீயென்விரங்குந்தாயாவான்-வாயு
சுதனென்றுலனென்றுலங்குபெயரோத
அதமன்றேநெஞ்சத்தணங்கு. (௭௪)

அணங்கிழைக்குந்தீயரடியற்றுமாள்வார்
மணங்கமழுமாமலரானுக்கும்-குணங்கமழும்
அஞ்சனையின்மைந்தனடிக்கீழ்விழுந்தார்க்கே
எஞ்சலிலையீரிடத்துங்காண். (௭௫)

காணுமோனாந்தின்வருகாரியத்தைக்கண்முதலா
மாணுமோனாந்தின்வழிவாங்காமல்-கோணலிலா
மூன்றையடக்கிமுனைபாலிரண்டிருத்தி
ஊன்றியொன்றையுற்றவனேயோர். (௭௬)

ஒருமனத்தாலுறுசமயப்பாடறிந்து
தேருமறிவதனாற்றேற்றிவிட்டுப்-பாரில்
இராமாநுசமதத்தையின்புற்றுத்தானும்
இராமாநுசனென்றானீடு. (எஎ)

ஈடிலாப்பேரருளாளனெண்ணிலாத்திண்வலியான்
நீடிலாங்கல்விப்பெருமையான்-நாடியிரந்
தேற்பவர்க்குநெஞ்சத்தினீறல்களைந்திடுவான்
காற்சுதனைப்போற்றீர்கனிந்து. (எஅ)

கனிந்தேதொழுமின் கடல்சூழ்புவியில்
இனந்தருநேர்சந்தமகிலேற்று-கனந்தேர்
பருவதமும்பாதகரும்பத்தர்மனத்தகமும்
சரிந்துதிரத்தாக்குபொலன்றாள். (எகூ)

தாளின்பெருமைதனிவான்மலையறியும்
தோளின்பெருமையந்தச்சூரியன்றேர்-வாலின்
பெருமையிலங்கைநகர்பேசுங்கரத்தின்
பெருமையினைவாளரக்கல்நீடு. (அ0)

நீளோர்போற்றும்பெருந்தகையின்பாதமலர்
நாடினார்க்கென்றுநலமுண்டாம்-வாடினார்
தாம்பெறுவாரேற்றம்தவித்தாரருள்பெறுவார்
பாம்பணையான்பாதம் பணிந்து. (அக)

பரிந்தேயடியாப்பரமனுக்குத்தொண்டு
புரிந்தேயவனருளைப்பெற்றுக்-கரிந்தே
விதிவழியிற்றீயும்வினையாளர்தம்மை
மதிவலியிற்றேற்றுவால்வந்து. (அஉ)

வந்துபிரமன்மதியாப்படைப்பதனால்
நொந்தவுயிர்நரகைநோக்குற்றார்-சந்ததமும்
ஆழ்நரகைக்காணாமலாங்கவரைக்காப்பதற்கா
வாழ்பதத்தைக்கோரிநின்றான்மால். (அங)

மாலுற்றயன்வாடிவாளாமனங்குழைந்து
கோளுற்றுத்தீமைமுன்கொண்டு-நாளுற்றுக்
கைப்பழக்கந்தானேர்ந்துகாட்டும்படைப்பதனால்
இப்புவிக்கேயேறுமிடர். (அச)

இடர்புரியுந்தீயவிராக்கதரும்பொல்லா
நடைபுரியுமூர்க்கர்களைநாளும்-திடமுடனே
போக்கிப்படைத்திடுவான்போதன்பதத்தினுக்கா
வாக்கின்வரித்தானவன். (அரு)

வன்கருமமுற்றாரைமாய்க்கவாநாதன்
தன்கருமமாக்கொள்ளருஞ்சியென-நன்கருமம்
நாமேமுதலிழைத்தானாராயணனையாவு
போர்மேடியெனமதித்தான்போந்து. (அசு)

துப்பாமதியுடனேதோராக்கலையுடனே
தப்பாதவுள்ளத்தரிப்புடனே-ஒப்பாக
இப்பாலுமப்பாலுமேதமின்றித்தான்படைக்கச்
செப்பாகச்செய்வான்றவம். (அஎ)

தவத்துக்குமாநிதியாத்தாரணிக்குநற்சார்பா
பவத்தின்றுயர்க்கோர்பகையா-கவுத்துவத்தான்
ஆனந்தவூற்றுவணிகொடிருவடியா
தானும்வினைபுரிவான்சார்ந்து. (அஅ)

சார்ந்தபெருங்கீர்த்திச்சதுமறையோன்பட்டத்தில்
வர்ந்தபதமேவியிருமையிலும்-நேர்ந்த
துயர்போக்கித்தூயசுகநல்கிவாழ
உயிராக்கிக்காப்பானுவந்து. (அகூ)

உவந்தவிழுதிகளிலோர்காலுமுக்கால்
நீவந்தமதம்பெறுகநேர்ந்து-பவந்துலைக்கும்
நாராயணன்பதத்தைநாளுமறவாது
நேராவுயிரளிப்பானேர்ந்து. (கூ0)

நேர்ந்துவருமுக்குணத்தினித்தியமாஞ்சத்துவமே
சேர்ந்துதலைபெடுப்பத்திண்மையுடன்-சார்ந்துவரும்
மும்மதமுமுத்தபருமுந்நிலையுமோட்டியுயிர்
செம்மையுறச்செய்யுமவன்சீர். (௯௧)

சீர்மேவுபாதத்திருமாலுடையருளால்
பார்மேவுசோகம்பறந்திடவே-ஏர்மேவு
தாமரையான்பதத்தைத்தான்விரும்பியோகுசெய்வான்
மாமலராடன்விழியினுல். (௯௨)

நாலுமுகநாலுவழிநாமகளுக்கேற்றவிதம்
ஞாலமதுபடைப்பநண்ணியதால்-சீலம்
விலகியிருண்மனத்துவேதன்படைத்த
நிலைவழுவிநின்றவென நேர்ந்து. (௯௩)

நேர்ந்தகனமதியானெஞ்சிலஞ்சுதானடக்கி
ஆர்ந்தமனத்துடனேயண்டமெலாம்-சேர்ந்த
ஒருமூன்றுதத்துவமுமோங்கிக்கனிய
வரங்கொண்டான்மாருதியாவந்து. (௯௪)

வந்தொருசங்கையினுன்மாநதியின்மேல்கரையில்
நந்தியிடுமனர்த்தநாடர்மல்-புந்தியர்கள்
மேலாவவதரிப்பவிங்குபுனலடுவில்
நூலானலமுரைத்தானேனன்பு. (௯௫)

நோன்புற்றவீரோழல்குறுவல்பரமன்
மாண்புற்றபாதம்பரவாமல்-வீண்பத்தி
நாசமதாப்போகநளினன்பதமடைவான்
கேசரியின்சிங்கங்கிளர்ந்து (௯௬)

கிளருமுயிர்களுக்குக்கேட்டவரநல்கி
வளருமரிபதத்தின்மாட்சி-தெளியவினி
எழுகதியுருவமெல்லாநலம்பருகி
வாழவினிவைப்பான்வரம்பு (௯௭)

வரம்பிலாவாயுவரசுதனல்வையம்
வரம்பிலாப்பேரின்பவாரி-நிரந்தரமும்
ஆடியகமகிழவையனளித்திடுவான்
கூடுகுணயோகங்கொடுத்து. (கூஅ)

கொடுப்பானிரந்ததெல்லாங்கோவியானுழி
எடுப்பானிருமதத்தைநெஞ்சில்-மிடுக்காப்
படைப்பானகிலமெலாம்பார்ப்பான்பதத்தில்
துடைப்பான்முன்னுள்ளபெருந்தூசு (கூகூ)

தூசிலாநன்மனத்தான்சொல்லும்பெருங்குணத்தான்
மாசிலாமேனிவடிவுடையான்-பூசிதமாம்
நற்பதமேவாழிபதைநாடுபவர்க்கிம்மையிலும்
அற்புதமாமம்மைவழி. (க00)

அனுமானந்தாதி-முற்றுப்பெற்றது.